ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

**यावद्वित्तोपार्जनसक्तः तावन्निजपरिवारो रक्तः ।**
**पश्चाज्जीवति जर्जरदेहे वार्तां पृच्छति कोऽपि न गेहे ॥**

**यावत्**—எவ்வளவுகாலபர்யந்தம்
**वित्तोपार्जनसक्त:**—பொருளைத்தேடுவதில் விருப்பமுள்ளவனாயிருக்கிறானோ
**तावत्**—அதுவரையில்
**निजपरिवार:**—தம் ஜனமானது
**रक्त:**—பிரியமாயிருக்கும்.
**पश्चात्**—பொருள் ஸம்பாதித்த பிறகு
**जर्जरदेहे**—ஜீர்ணத்தையடைந்த இச் சரீரமானது
**जीवति सति**—உயிருடனிருந்தால்
**गेहे**—வீட்டில்
**कोऽपि**—ஒருவரும்
**वार्तां**—மொழியை
**न पृच्छति**—செவியிற்கொள்ள மாட்டார்கள்.

ஒருவனால் அபிமானிக்கப்படும் வஸ்துக்களில் முக்கியமான பார்யை புத்திரன், பந்து, வேலைக்காரன் முதலியவர்களிடமிருக்கும் தோஷத்தை இதினால் விளக்கிக்காட்டுகிறார்.

நீ எவ்வளவு காலம் வரையில் எவ்விதத்தொழிலைச் செய்தாவது தனத்தைச் சம்பாதிக்கின்றாயோ அதுவரையில் உன்னிடமிருக்கும் பொருளைத் தாமும்பெற்று ஸுகத்தை யடையக்கருதி ஸகல ஜனங்களும் உன்னிடம் அதிகமான பிரீதியுடனிருப்பதாக நடிப்பார்கள், அதிக வயதை யடைந்து, சக்தியையிழந்து ஒரு விதமாயும் பொருள் தேடமுடியாமல் மிகவும் தளர்ந்த சரீரத்துடன் நீ ஜீவித்திருப்பாயாகில், அக்காலத்தில், இதற்குமுன் உன்னிடம் அதிக அன்பு பாராட்டிவந்த உன் கிரகத்திலுள்ள ஜனங்களில் யாராவது ஒருவராகிலும், உன் வார்த்தையைக்கூட கவனிக்க மாட்டார்கள். நம்மிடமிருந்து விசேஷமான உபகாரத்தைப் பெற்றவர்கள் நாம் ஜீவித்திருக்கும்பொழுதே நம்மை அவமதித்து கவனிக்காமலிருப்பார்கள்? என்று எற்பட்டால் நம் பரலோகத்திற்கு இவர்களால் அற்பம்கூட ஒருவித ஸாதகமும் செய்யமுடியாதென்றுகூறவும் வேண்டுமோ? ஆகையால் பயனற்ற இவ்வுலகத்திலுள்ள விஷயங்களில் அற்பம்கூட பற்றுதலை வைக்காமல் வைராக்கியத்தை ஸம்பாதிக்க வேண்டியது முக்கியம்.

சுபம் !

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

க்ஷய-௵ ஆனி-௴ ௨௪-௨


## கடவுள் ஒருவர் உண்டு.

(308-வது பக்கத் தொடர்ச்சி.)

அங்ஙனமன்று, காரியத்திற்குக் காரணம் முற்றிலும் நம்மவர்களாற் கண்டுபிடிப்பது அசாத்தியமாகும். எங்ஙனமெனில், பிரபஞ்சத்துக்குக் காரணமாகும் கடவுள், கடவுளுக்குக் காரணம் இன்னொன்று, இப்படி அநவஸ்தா தோஷத்தால் கெட்டலைந்து அவசானிப்பதிலும் பிரபஞ்சத்துக்குக் காரணமாகக் கடவுள் என்னும் வஸ்து ஒன்றில்லை யென்று முடிப்பது நலமாமே யென்னில், அதுபோலி நியாயமென்பதைக் காட்டுவாம். முதலாவது காரியத்திற்குக் காரணந்தேடுவதேயன்றி காரணத்திற்குக்காரணந் தேடுவதில்லை. "வஸ்திரத்துக்கு நூல் காரணம். நூலுக்குப் பருத்தி காரணம். என்பதெல்லாம் போம்வழியேதென்னில்" வஸ்திரத்துக்கு நூல் காரணமாயிருந்தபோதிலும நூலும் காரியப்பட்ட வஸ்துவேயாம். நூலுக்குக்காரணம் பருத்தியென்பது செல்லும். ஆனால் அந்த விவகாரம் நமது விவகாரத்திற்கு உதவாது. பிரபஞ்சம் காரியப்படும் வஸ்து. கடவுள் காரியப்படாத வஸ்து. ஆகவே பிரபஞ்சத்திற்குக் காரணம் கடவுள் என்றால் கடவுளுக்குக் காரணம் விசாரிப்பது அறிவீனமென்றே முடியும். கடவுள் காரியப்பட்ட வஸ்துவென்று எவ்விதசங்கதியினாலாவது எற்படும் பக்ஷத்தில், கடவுளுக்குக் காரணம் விசாரிப்பது ஆவசியகமாகும். அப்படிக்கில்லாமல் விவகரிப்பது குதர்க்கமாய் முடியுமென்க. இரண்டாவது ஒரு காரியத்திற்கு ஒரேகாரணஞ்சொல்வது நியாய சாஸ்திர தத்துவத்திற்கு விரோதமாகும். ஒரு காரியத்திற்கு மூன்று காரணங்கள் முக்கிய ஆவசியகம். மேற்குறித்த வஸ்திரத்திற்குப்

பருத்தி காரணமென்றாலும் அதுதானே வஸ்திரமாகவாவது, வஸ்திரத்தைத்தான் உண்டாக்கவாவது முடியாது. பருத்தியைக் கொண்டு வஸ்திரஞ்செய்ய ஒரு சேணியனும், இன்ன உபயோகத்திற்காகப் பருத்தி எடுத்து நூலாக்கி வஸ்திரமாகச் செய்யவேண்டும் என்கிற உத்தேசமுங் காரணப்படுகிறபடியால், வஸ்திர முண்டாகிய காரியத்திற்குச் சேணியன் நிமித்தகாரணமும், பருத்தி உபாதான காரணமும் சேணியனுக்குண்டாயிருந்த உத்தேசம் விசேஷ காரணமும், இப்படி மூன்று காரணமில்லாமல் ஒருகாரியமும் உலகில் முற்றுப்பெறாது. ஆகவே வஸ்திரம்போல் கார்யமான இப்பிரபஞ்சத்திற்குச் சேணியன்போல் கடவுளும் பருத்திபோல் மாயையும் இதினின்றும் ஜீவபந்த மோக்ஷத்தை யுத்தேசித்து இப்பிரபஞ்சமுண்டாக்கி நடைபெறுகிறதென்று சங்கையறவுணர்ந்துகொள்வதே தகுதியாமென்க. இந்த நியாயங்களால் (நாஸ்திகரால் பரமாணுக்கள் என்று சொல்லப்படும்) மாயை அல்லது மூலப்பிரகிருதியானது அறிவில்லாத ஜடமாகையால் தானே காரியப்படமாட்டாதென்று (அறிவுடைய ஜீவர்களால் இப்பிரபஞ்சம் தோன்றி நின்றழியுமென்னில்) அச்சீவர்களிடத்தில் கிஞ்சித்ஜ்ஞத்வமுதலிய தோஷங்களிருப்பதால் அவர்களாலும் முடியாதென்றும் ஆகவே சர்வக்ஞராகிய ஈசுவரனாலே இப்பிரபஞ்சம் காரியப்படுத்தப் பட்டிருக்கின்றதென்றும், பூர்வம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்குமுண்மையே இங்கும் உறுதிபெறுகின்றது.

கிஞ்சித்ஜ்ஞத்வமுதலான தோஷங்கள் ஜீவாத்மாவினிடமிருப்பதாகச் சம்மதிக்கிறபடியால் ஜீவாத்மாக்களாகிய நம் போலியரால் நிச்சயிக்கப்பட்ட கடவுள் ஒரு சமயம் பரமார்த்தத்தில் இல்லையென்று தீருமானால், அவர் பொருட்டு நாம் செய்துவந்த வழிபாடுகளும் விசுவாசங்களும் மற்றெல்லாக் காரியங்களும் விருதாவாகத்தானே போய்விடும் என்று ஓர் யுக்திசொல்லி வாதிக்கில் இவ்வாதம் நிலைபெறாது ஏனென்றால் கடவுள் ஒருவர் உண்டென்று கூறுகிறவர்கள் வேறு பிரமாணத்தைக் காட்டாமல் தமது சொந்த அபிப்பிராயத்தால் மாத்திரம் ஸாதிக்க முன்வருவார்களாகில் இவ்வித வாதத்திற்கு இடம் கிடைக்கும். அனாதியாக உள்ள சிறந்த பிரமாணங்களால் ஸத்ய வசனங்களுடனும் விளங்கும்

வேதங்களை மேற்கோளாகக்கொண்டு தங்களது கருத்தை வெளியிடுகிருர்கள் ஆகையால் அதில் சந்தேகத்திற் கிடமில்லை. இப்படியிருக்க, கடவுளொருவரில்லையென்று தர்க்கஞ்செய்து காலங்கழித்து, யதார்த்தத்தில் கடவுளொருவருண்டென்று நேரு மானுல் இம்மை மறுமைகளில் நமக்குண்டாகும் கஷ்ட நஷ்டங் கட்கோர் எல்லையிராதே யென்ருலோசித்தல் நன்மையினுஞ்சிறந்த நன்மையாமன்ரே? இவ்வுண்மைகளை நன்குணராது தாம்கற்ற அற்ப அறிவினல் அனேக ஏழைகளை மயக்கிக் கெடுத்துத் தேச மெங்கும் நாஸ்திகம் பாவவேண்டுமென்று சிலர் அதிகம் முயற்சிக் கின்ருர்கள். ஆ! இவர்கள் வினையிருந்தவாறு நோக்க எமக்குப் பரிதாபமேலிடுகின்றது. இனி யாம் அவர்களுக்கும் அவர்கள் சொல்லிற்சிக்குண்டு மயங்கும் ஏனையோருக்கும் சொல்ல விரும்பும் இதமாவது, மேற்சொன்ன கெடுமதியைக் கட்டோடே விட்டொழித்து, உலகசிருட்டி ஸ்திதியாதிகளுக்குக் காரணகர்த்தாவாகிய கடவுள் ஒருவர் உண்டென்பதை நல்ல புத்தியால் அளந்தறிந்து திரிகாணங்களாலும் அவரை வழிபட்டு விதி விலக்குகளை நீக்கி, விதியாயுள்ள சதாசாரங்களைத் தழுவி நடந்து இம்மை மறுமைப் பயன்களுக்குப் பாத்திரராகி மிக அருமையாகக் கிடைக்கப் பெற்ற தங்களது மானிடப்பிறவிக்குப் பெருமையையும் பிரயோஜனத்தையுஞ்செய்து வாழவேண்டுமென்பதேயாம். சுபம்.

உபபத்திராதிபர்.

---

## "தீக்ஷை தர ஆதித்திராவிடருக்கு."

(316-வது பக்கத் தொடர்ச்சி.)

இக்காவ்யகண்டம் காவ்யமாவது கேட்டிருந்தால் இம்மாதிரி பேச இடமிராதென்று நினைக்கிறேன். பாருங்கள் காவ்யம் படிக்க ஆரம்பிக்கு முன்னரே அமரம் என்றுஒன்று சொல்லிக்கொடுப்பதுண்டு. அதில் **आर्यावर्तः पुण्यभूमिः** என்று ஓர்வாக்கியமுண்டு, அதன் அர்த்தம் யாதென்ருல் ஆரியர்கள் வஸிக்கும் இடம் பூமி

புண்யபூமி எனப்படும் என்பதே, ஆகவே ஆர்யர்களென்றால் பூஜிக்கத்தக்கவர்கள் என்ற அர்த்தத்தையே வியாகரண ஸூத்திரத்திலும் வெளியிட்டிருக்கிறார். இவ்வளவெல்லாம் சுலபமாய் அறியக்கூடியதே. இது காவ்யகண்டத்திற்குத் தெரியாமற் போய்விட்டதே. இவர்கருத்துப்படி ஆர்யர்களென்றால் மாமிசத்தைத்தின்றுகொண்டு கெட்ட போக்கிறிகளாம். இவர்கள் மெள்ள மெள்ள ஆதித்திராவிடர்களிடம் வந்தார்களாம். இந்த அயோக்கியர்களை ஆதித்திராவிடர்களென்ற பறையர்கள் மிகசுத்தமாய் இருந்ததால் அடித்து வெருட்டினார்களாம் பிறகு சுத்த ஆசாரமுள்ள ஆதித்திராவிடர்களின் பழக்கம் நெருங்க நெருங்க மாமிசம் தின்பதையெல்லாம் விட்டொழித்து ஆதித்திராவிடர்கள் போலானார்களாம். பிறகு சில ஆர்யர்களென்ற போக்கிரிகளின் பழக்கத்தால் ஆதித்திராவிடர்கள் மாமிசந்தின்ன ஆரம்பித்துவாவா அவர்கள் மாமிசமற்றவர்களாயும் ஆதித்திராவிடர்கள் மாமிசம் தின்னும் இபற்கையுடையவர்களாயுமாகி இப்போது ஆதித்திராவிடர்களையே இவர்கள் ஓட்டிவிடுகிறார்களாம். இந்த ரகஸ்யத்தை எங்கிருந்து கண்டுபிடித்தார். ஏதோ ஆதித்திராவிட ரிஷிதான் இவருக்கு ரகஸ்யமாய் உபதேசித்திருக்கவேண்டும். அதை இப்போது ஆதித்திராவிடர்களின் ஸபாமத்தியில் தாங்காமல் உடைத்துவிட்டார். இன்னொரு விசித்திரம் பாருங்கள். இவர் உபந்யாஸ ஆரம்பத்தில் பிராமணர்கள் எந்த மந்திரங்களை ஓதிவந்தனரோ அதையே இவர்கள் ஓதினர் என்றார். இதனால் பிராமணர்கள் மேலாய் இருந்து வந்தார்கள் என்பதையே ஏற்றுக்கொண்டல்லவா அவர்கள்போலதான் இவர்களும் என்று சொன்னார். அதனாலல்லவோ சங்கராசார்யரையும் காளிதாஸனையும் குறிப்பிட்டார். ஆரியர்கள் அயோக்கியர்களென்று இப்போது சொல்கிறபடியானால் அயோக்கியர்களான இவர்களது மந்திரமும் வந்தன வழிபாடுகளும் இவர்களுக்கு எதற்கு, இவ்விதம் தாறுமாறுப் பிதற்றல் எங்கு போய் நிற்குமோ வயிற்றெரிச்சல் இம்மட்டா. ஆரியர்கள் ஸோமபானம் சுராபான மென்றெல்லாம் பேர் வைத்துக்கொண்டு குடியையும் பசுவைத்தின்பதையும் வழக்கமாய் வைத்திருந்தார்களாம். அதுதான் ஆதித்திராவிடர்களிடத்தில் தாவிவிட்டதாம். என்ன அனியாயம்! இவர் பறையர்களின் மத்தியில் பேசுவதை ஸர்வஜனங்களின் மத்தியில் பொதுவாய் லௌகிக வைதிகர்கள் கூட்

டத்தில் பேசத்துணிவாரா, அல்லது ஏதாவது பேபரில் விரிவாய் எழுதி ஸித்தாந்தம் செய்ய சக்திபெறுவாரா. எழுத சக்திஉண் டென்ருல் ஆர்யதர்ம பத்திரிகையிலேயே எழுதட்டும் அல்லது எங்களை வேறு எந்தப் பத்திரிகைக்காவது அழைக்கட்டும். இனிக் கடைசியாய் ஓர் வார்த்தைகூறி இதை முடித்துக் கொள்கிறேன்.

இவர் குடியும், மாமிசமுண்ணலும் கெடுதல் என்று தெரிந்து கொண்டிருக்கிருர். ஆனல் நம் ஆர்யர் இவர் சொல்கிறபடிமாமிசம் தின்னவேஇல்லை கட்குடிக்கவேஇல்லை. இவர்களைக் கண்டு வெகுதூரம் ஓடுவார்கள். கடைசியில் காவ்யகண்டத்தை அனுஸரித்துப்பேசி முடிக்கிறேன். இவரது உபதேசப்படி ஆதித் திராவிடர்கள் குடியையும் மாமிசத்தையும் பூராவாகஒழித்து பரம சுத்தர்களாய் சுசியுள்ளவர்களாய் ஆகி கெட்ட பழக்கங்களை யெல்லாம் ஒழித்துவிட்டு கிராமங்களையும் வீடுகளையும் சுத்தமாய் வைத்துக்கொண்டுவரட்டும். அதன்பிறகு காவ்யகண்டத்தோடு நாமும் அவர்களுக்கு புத்திமதி கூறுவோம். பிறகு அவர்களது தீக்ஷையையும் கவனிப்பாம். சுபம்!

M. N. சுப்பிரமணியசாஸ்திரீ.

---

# உண்மை.

---

உண்மை, வாய்மை, பொய்யாமை என்பன ஒரு பொருளைக் குறிப்பன. உள்ளவாறு உரைத்தல் உண்மை எனப்படும். உள்ளவாறு உரைத்தல்; கண்டதைக் கண்டபடியே கூறுதல்; கேட்டதைக் கேட்டபடியே கூறிதல்; நடந்ததை நடந்தபடியே கூறுதல்; செய்ததைச் செய்தபடியே கூறுதல்; கூறியதைக் கூறியவாறே கூறுதல்; எண்ணியதை எண்ணியபடியே கூறுதல் என விரித்து உரைக்கப்படுவதாகும். வாய்மை—மெய்யினது தன்மை வேறு ஓர் உயிர்க்கும் தீங்கினை உண்டாக்காத சொற்களைச் சொல்லுதல் உண்மையாகும்.

இஃது இன்பம் காரணமாகவும், பொருள் காரணமாகவும் உண்டாகக்கூடிய பொய்ம்மையினின்றும் விலகி நிற்பது, பொய்

ம்மை உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும் உரைப்பது. பொய்ம்மை உண்மைக்கு எதிர் மொழியாகும். இப்பொய்யினை ஒருமுறை கூறியவன் உடனே அதனை உணர்ந்து "ஐயா நான் தவறிப் பொய்யினைக் கூறிவிட்டேன்; அப்பிழையைப்பொறுத்து என்னை மன்னித்தருளல் வேண்டும்'' என்று கூறுவதே அறிவுடைமையாம். அங்ஙனம் கூறுவது ஒருபொய்யோடு அவனை விலக்கிவிடும். அவ்விதம் செய்யாது தான் கூறிய பொய்யை மெய்யாக்க முயல்வானாயின், அஃது அவனைப்பல பொய்களைச் சொல்லுமாறு செய்து கடைசியிலே பொய்யனாகவும் செய்து விடும். ஒருவனிடம் பொய் பேசுதலாகிய பாவம் ஒன்றிருப்பின் அதுவே வழியாக எல்லாப் பாவங்களும் அவனை வந்தடையும். அதனை நீக்கின் அவனிடம் எல்லாப் புண்ணியச் செயல்களும் வந்தடையும். தனது நெஞ்சம் அறிந்த செய்தியை மறைத்துப் பொய்யினைக்கூறுவனாயின், பின்னர் அவனது நெஞ்சமே அவனைச் சுடும். பொய்பேசாது வாழ்பவன் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களின் உள்ளத்துள்ளும் இருப்பவன். பொய்யில்லாமையே குறையாத ஒளியினை உடைய விளக்குப்போல்வது. பொய்யன் உண்மையைச் சொன்னாலும் அஃது உலகினரால் பொய்யாகவே கருதப்படும். விளையாட்டாகவும் பொய்யினைக் கூறலாகாது. புலி வருகிறது! புலிவருகிறது!! என்று கூறிய இடைப்பையன் கடைசியில் உண்மையாகவே புலிவர எவ்வளவு அலறியும் பயன்படாது உயிர் நீத்தமை இந்த உண்மையை விளக்கவில்லையா?

மெய்யின்றிச் செய்யப்படும் தருமம் தனக்குரிய புண்ணியப் பயனைத் தரமாட்டாது. மெய்யாகிய உண்மையே மனத்தைப் பரிசுத்தப்படுத்துவது எவ்வளவு ஆராய்ந்து பார்த்தாலும் உண்மைபோலும் நன்மையைச் செய்யக்கூடியது பிறிதொன்றில்லை. மெய்யே மேலான தருமம். மெய்யே மேலான தானமாகும். மெய்யே மேலான தவமாகும். மெய்யே சிறந்த பெருமையைத் தருவதாம். மெய்யே அனைத்தையும் நிலைபெறுத்துவதாம். மெய்யே எல்லாவற்றிற்கும் இருப்பிடமாம். மெய்யே உயிர்க்கு உறுதியினை விரும்புவோர்க்கு உறுதுணையாவதாம்.

மெய்ம்மையாக நடப்பவனே மனிதர் செய்யக்கூடிய தருமச் செயல்களைச் செய்தற்கு உரியன்; மெய்யனே இம்மையிலே பொ

ருளையும், மறுமையிலே புண்ணியப் பயனையும் அடைவான்; மெய் பேசுபவனே பிறரால் நன்கு மதிக்கப்படுவான்; அவனே தனது காரிய சித்தியையும் பெறுவான்; மெய்யுரைப்போன் கேடுநேர்ந்த காலத்தும் மனமகிழ்ச்சியுடன் இருப்பான்; அவனுடைய பகைவர்களும் அவனை உயர்வாகப் போற்றுவார்கள்; அவன் தெய்வத் தன்மை வாய்ந்த மகா புருஷனாக உலகினரால் எண்ணப்படுவான்; அவனையே உலகம் பின்பற்றும். அவனது மனத்தையே ஆண்டவன் தனக்குரிய கோயிலாகக் கொள்வான், அவன் விண்ணோரும் தொழத்தக்க பெருமையை ஆண்டவனால் அளிக்கப் பெறுவான்.

ஓர் ஊரில் ஒரு பாதகன் இருந்தான். அவன் ஐம்பெரும் பாவச் செயல்களையும் அஞ்சாது செய்பவன். அவனால் செய்யப் படாத பாவம் இருக்கமுடியாது. இவனுக்கு ஒரு குரு இருந்தார். அவர் இவனைத் திருத்தும் பொருட்டுப் பலவாறாக முயன்றார். "அப்பா, ஏன் இப்படிப் பலவாகிய பாவச் செயல்களையும் செய்து வீணே அழிந்துபோகின்றாய் மனிதப்பிறப்பு இலகுவிலே கிடைக்கக்கூடாததாயிற்றே. நிறைந்த புண்ணியத்தின் பயனாகக்கிடைத்த இந்த மனிதப் பிறப்பை அடைந்திருந்தும் அப்பிறப்பால் வரக்கடவதாகிய பெரும்பயனை அடையமுயலாதிருக்கின்றனையே. இங்ஙனமே தீச்செயல்களைச் செய்துகொண்டுபோனால் நாளைக்கு நமனுக்கு வகைசொல்லவேண்டாமா? அவன் நடுநிலை பிறழாதவன் ஆயிற்றே. பாவத்திற்குத் தக்க தண்டனையை அளிப்பதில் சிறிதும் தவறமாட்டானே. அக்காலத்தில் பெரிதும் வருந்த நேரிடுமே. உன்னால் மனிதப்பிறவியைப் பெற்றவர் செய்யவேண்டிய தருமச்செயல்களைச் செய்ய இயலாவிட்டாலும் குற்றமில்லை. தீயனவற்றைச் செய்யாதிருப்பதும் போதுமானதே. அச்செயலே உன்னை நல்வழிப்படுத்திப்புண்ணியவானாகச்செய்து விடுமே. ஆதலின், இனி அப்படிப் பாவச்செயல்களைச் செய்யாதே. இயன்ற அளவு நன்மையைச் செய்து இன்புறுவாயாக" என்று வற்புறுத்திக் கூறியருளினர்.

கேட்டான் பாதகன்; சிறிது மனம் மாறலுற்றான்; தான் செய்வன பாவச்செயல்கள் என்பதை உணர்ந்தான்; 'நெடுநாளாகப் பழக்கத்தில்வந்த அவற்றை எங்ஙனம்விட இயலும்' என்று வருந்தினன். தனக்குள்ளேயே பெரிதும் ஆலோசனை செய்ய

லானான். கடைசியாகப் 'பொய் ஒன்றை மாத்திரம் சொல்லாது நிறுத்திவிடலாம்' என்று எண்ணினான். குரு மகாராஜருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினான். "ஐயன்மீர், அடியேன் பெரும்பாவியே. மகாபாதகங்களையும் செய்திருக்கிறேன் என் செய்வது ? அவை என்னால் பலநாட்களாகச் செய்யப்படுவன. பழக்கமிகுதியால் அவற்றை என்னால் செய்யாதிருக்க இயலவில்லை. தங்களது அருள்வாக்கியத்தைத் தட்டவும் மனம் வரவில்லை. ஆகவே, தாங்கள் இனிது ஆராய்ந்து என்னிடத்திலுள்ள பாவச் செயல்களில் ஏதேனும் ஒன்றனைக்குறிப்பிட்டுக் கூறுங்கள். அங்ஙனமே செய்வேன். என்னால் பிறவற்றை விடமுடியாது. 'பொய் ஒன்றை மாத்திரம் விட்டுவிடலாம்' என்று தோன்றுகின்றது. தங்களது கருத்தும் அதற்குப் பொருந்துவதாயின் அடியேன் பிழைத்துப்போவேன்" என்று இரக்கம் உண்டாகுமாறு சொன்னான். சொல்லலும் பார்த்தனர் குருதேவர். 'மெய் அனைத்துப் பாவச்செயல்களையும் வேரோடு அறுத்துவிடும்' என்ற உண்மையை உணர்ந்தவர் ஆதலின், பெருமகிழ்ச்சியுடன் தமது சீடனை நோக்கினார். தமது கருத்து நிறைவேறிவிடும் என்று எண்ணினார். பெருங்கருணையாளராகிய கடவுளது திருவருளை வியந்தார். "அப்பனே, உனது மறுமொழி எமக்குப் பெருமகிழ்ச்சியை விளைவித்தது. நீ உன்னிடத்திலுள்ள பிறபாவச்செயல்களை விலக்க முயலல்வேண்டாம். உனது கருத்தின்படி 'பொய்' ஒன்றை மாத்திரம் சொல்லாது விட்டுவிடு. எப்பொழுதும் உண்மையாகவே நட. இந்த உறுதியிற் சிறிதும் தவறாதே" என்று கட்டளையிட்டார். அவனும் அதற்கு உடன்பட்டான்,

இவ்வாறு உடன்பட்டு உண்மை வழி ஒழுகமுயலும் அப்பாதகனான் சீடன் ஒருநாள் இரவிலே அவ்வூர் அரசனது அரண்மனையிலே திருடக் கருதினான். அதற்கு வேண்டிய கருவிகளுடன் உடலெல்லாம் கரியைப் பூசிக்கொண்டு இருட்டேபோலச் சென்றான்; தக்க சமயத்தைப் பார்த்துப் பதுங்கிநின்றான். நிற்றலும் நகரசோதனைக்காக மாறுவேடம்பூண்டு அவ்வழியே வந்த அரசன் அவனைக் கண்டான்; திருடன் என்பதை அறிந்தான். "நீ எதன் பொருட்டு வந்தாய்: உண்மையை ஒளிக்காமற் சொல்" என்றான். என்றலும், திருடன் "அண்ணே, நான் அரசனது அரண்மனையிலே

திருடும்பொருட்டு வந்துளேன்" என்றான். கேட்ட அரசன் அவன் உண்மை பேசியதை எண்ணி ஆச்சரியப்பட்டான்; அவனது செய்கை முழுவதையும் அறிய எண்ணினான். "அண்ணே, நானும் திருடுவதற்குத்தான் வந்தேன்; நான் இங்கேயே இருந்து பார்த்துக்கொண்டிருக்கிறேன்; நீ உள்ளேபோய் திருடி வா; எனக்கும் பாதியைக்கொடு" என்று சொன்னான்.

திருடன் அதற்கு உடன்பட்டான்; அரண்மனைச் சுவரிலே கன்னம் வைத்தான்; அரசனை நுழைவாயிலுக்குக் காவலாக வைத்துவிட்டுத் தான் உட்புகுந்தான்; பொக்கிஷத்தை அடைந்தான்; அங்கே ஓர் இடத்தில் ஒரு பெட்டியிலே விலையேறப்பெற்ற மூன்று இரத்தினங்கள் இருப்பதைக் கண்டான்; அவற்றுள் இரண்டை எடுத்துக்கொண்டான்; மற்றொன்றை எடுத்துப் போனால் பாகம்பண்ணிக்கொள்ள முடியாததலின் அதனை அப்பெட்டியிலேயே வைத்துவிட்டுத் தான் வெளியே வந்தான்; காவலாகக் கன்னவாசலிலே உட்கார்ந்துகொண்டிருக்கும் அரசனிடத்திலே ஒன்றைக் கொடுத்தான். ஒன்றை எடுத்துக்கொண்டான் மாறுவேடத்துடன் இருந்த அரசன் அந்தத் திருடனது பெயர் இடம் முதலியவற்றைக்கேட்டு அறிந்துகொண்டான். இருவரும் பிரிந்துபோயினர்.

போனபின், அரசன் அரண்மனைக்குச் சென்றான்; பொக்கிஷத்துள் நுழைந்தான்; பெட்டியைப் பார்த்தான்; இரத்தினம் ஒன்று இருப்பதைக் கண்டான்; உள்ளம் பூரித்தான்; திருடனது உண்மையை வியந்தான். ஒருவரும் அறியாது நித்திரைபோனான்.

பொழுது புலர்ந்தது. அரசன் அத்தாணிமண்டபத்தை அடைந்தான்மந்திரி முதலாயினோரும் வந்தடைந்தனர். அடைதலும், அரசன்பொக்கிஷமந்திரியைப் பார்த்தான் "மந்திரி நம்முடைய செல்வங்கள் சரியாகக் காக்கப்பட்டுவருகின்றனவா? பொக்கிஷசாலை இனிது காக்கப்படுகின்றதா?" என்று வினவினான். வினவலும மந்திரி அரசனைப்பார்த்து "மன்ன, நம்முடைய செல்வங்கள் இனிது காக்கப்பட்டு வருகின்றன. ஆனால், நேற்றிரவு நமது பொக்கிஷசாலையிலிருந்த மூன்று இரத்தினங்கள் களவுபோயிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்துக் கொண்டுவரத்தக்க ஏற்பா

டுகளைச்செய்துள்ளேன். அச்செய்தியைத் தெரிவிக்க இங்கு வந்தேன். தேவரீரும் வினவினீர்கள்" என்று உரைத்தான். பாவம்! 'மூன்றாவது இரத்தினம் தன்னிடத்தி லிருக்கின்றது என்பதை அரசன் இலகுவில் அறிந்துகொள்ளக் கூடியவனாயிருக்கிறான்' என்ற செய்தி அந்தப் பொக்கிஷ மந்திரிக்குத் தெரியாது போயிற்று. 'கெட்டிக்காரன் புளுகு எட்டுநாள்' என்பார்கள். இந்த மந்திரியார் கைக்கொண்ட புளுகு எட்டுநிமிஷங்களில் வெளிப்பட்டுவிட்டது.

கேட்டான் அரசன். 'மந்திரி ஓர் இரத்தனத்தைத் திருடிவிட்டான்' என்பதைத் தெரிந்துகொண்டான்; தன்னுடைய உத்தியோகஸ்தர்களைச் சிலரை அழைத்தான். ஒரு பல்லக்குடன் தான் முதல்நாள் இரவு பார்த்த திருடன் இருக்கும் இடத்திற்கு அனுப்பினான்; அப்பல்லக்கில் அந்தத்திருடனை ஏற்றிக்கொண்டு வருமாறு கட்டளையிட்டான்; அவர்களும் அங்ஙனமே சென்றார்கள். அத்திருடனது வீட்டிற்குச் சென்றார்கள்; அவனைக் கண்டு "ஐய, தங்களை எங்களது அரசர் இந்தப் பல்லக்கில் ஏற்றித்தூக்கி வருமாறு எங்கட்குக் கட்டளையிட்டுள்ளார். தயைசெய்து ஏறி அருள்வீர்களாக" என்றார்கள்.

என்றலும், திருடன் நடுநடுங்கினான்; 'முதல் நாள் இரவு தன்னைத் திருடுங்கால் பார்த்தவர் அரசரே' என்று எண்ணிக்கொண்டான்; 'இன்று தான் இறந்துவிடுவது நிச்சயம்' என்றும் அறிந்துகொண்டான்; மனைவி முதலாயினாரிடம் கூறி விடைபெற்றான்; தனது உள்ளக்கருத்தைப் புறத்தே காட்டாது பல்லக்கில் ஏறிக்கொண்டான்; 'உயிர்போனாலும் குரு மகாராஜரிடம் கொடுத்த வாக்கு தத்தம் தவறிவிடுமாறு பொய் சொல்லுவதில்லை' என்று உறுதி செய்துகொண்டான். பல்லக்கும் அரண்மனையை அடைந்தது. திருடன் முதலாயினாரும் ஆஸ்தானமண்டபத்தை அடைந்தனர்; ஆசனங்களில் அமர்ந்தனர்.

அமர்தலும், அரசன் சபையோர்களைப்பார்த்து "பெரியோர்களே, இப்பொழுது நமது சபைக்கு வந்த பெரியார் நுங்கட்குச் சில செய்திகளைக் கூறுவார். தயைசெய்து கேட்டருள்வீர்களாக"

என்று கூறி முதல்நாள் இரவு நிகழ்ந்த செய்திகளைக் கூறுமாறு அத்திருடனுக்குக் கட்டளையிட்டான். அவன் தன்னிடத்திலுள்ள இரத்தினத்தை முன்னே வைத்துத் தனது வாக்குதத்தத்தை நிறைவேற்றவேண்டி நடந்தவாறே அனைத்தையும் கூறினன். கூறலும் அரசன் அப்பால் "இவர் கூறிய அனைத்தும் உண்மையே நேற்றிரவு பொக்கிஷப் பெட்டியைத் திறந்து பார்க்குங்கால் பாக்கியாகிய ஓர் இரத்தினம் இருந்தது. என்னிடம் திருடிய பெரியவர் கொடுத்த இரத்தினமும் இங்கே இருக்கின்றது. இந்நிலையில் மூன்றாவது இரத்தினம் யாரிடத்தில் இருக்கவேண்டும். நீங்களே கூறுங்கள்" என்றனன். என்றலும், அனைவரும் ஒருமொழியாகப் "பொக்கிஷம் மந்திரியாரிடமே இருக்கவேண்டும்" என்றனர். மந்திரியும் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டார். அரசன், மந்திரிக்குத் தக்க தண்டனையை விதித்து அத்திருடனைத் தனது மந்திரிகளுள் ஒருவராக்கிக்கொண்டான். அவனும் அன்று முதல் எதும் பாதகச்செயல் புரியாது தருமசீலனாய் வாழ்ந்து இன்புற்றான்; குருவருளை மகிழ்ந்து போற்றினான். பாருங்கள்! உண்மையின் பெரும்பயனை. இத்தகைச் சிறந்த உண்மையை ஒவ்வொருவரும் கைக்கொண்டு இன்புறுவது தலையாய தருமமாகும்.

தண்டமிழ்த்தொண்டன்.

உ

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

# ஒன்பதாவது அத்தியாயம்.

## விஷயசூசனை.

---

[இது சர்வதீர்த்தமானது ஏகாம்பரநாதர் தம்முடைய காற் பெருவிரலால் உண்டாக்கப்பட்டது என்பதையும், இரண்டு முறை பெருகிவந்த கம்பைவெள்ளம் அதில் வீழ்ந்துள்ளது என்பதையும், அந்தச் சர்வதீர்த்தம் காமாக்ஷி தேவியினால் கட்டப்பட்டது என்பதையும், பின்னர் அத்தேவி தாம் செய்துவந்த முப்பத்திரண்டு அறங்களையும், நடத்திவரக் கணபதியை நியமித்தார் என்பதையும், சர்வதீர்த்த மகிமையினால் ஒரு பிராமணனுடைய, பிதுர்க்கள் நரகத்தினின்றும் கைலைக்கேகினார்கள் என்பதையும், விளக்குவது.]

சர்வதீர்த்த ஸ்நானகாலத்தில் ஜபிக்கவேண்டிய சுலோகங்கள்.

श्रीशैलस्याग्निदिग्भागे योजनेचैकविंशके ।
कावेरीकृष्णयोर्मध्ये तत्र गौरीतपोवने ॥
कम्पाया दक्षिणे कूले रुद्रशाला धरातले ॥१॥
एकाम्रनायकश्शम्भुः सदा तत्रैव वर्तते ।
उमालिङ्गनसंक्रान्तकुचकङ्कणमुद्रितः ॥२॥
लिङ्गमेकाम्रनाथस्य सैकतं समुपास्महे ।
योऽर्चयेत् रुद्रशालायां लिङ्गमेकं प्रयत्नतः ॥३॥
कोटिलिङ्गार्चनफलं शिवलोकं च गच्छति ।
यो वसेत् रुद्रशालायां क्षणार्धं वा तदर्धकम् ॥४॥
मुच्यते सर्वपापेभ्यः साक्षाद्भर्गो नराकृतिः ।
शिवबीजसमुद्भूतं वेदशाखाभिरुज्ज्वलम् ॥५॥
मृकण्डुतनयाधारं रसालं तं नमाम्यहम् ।
श्रीमदेकाम्रवृक्षस्य यो वसेन्मूलभूतले ॥६॥

गुणवृत्त्या मुहुस्तस्य कोटिलिङ्गार्चनं भवेत् ।
सुप्रसन्नं महादेव्या नित्यकल्याणसुन्दरम् ॥७॥
महाप्रळयपापघ्नं रसालेशमहं भजे ।
चूतेशाम्बिकयोः काञ्च्यां शिवाविर्भाववासरे ॥८॥
कल्याणं कुर्वतः कोटिकन्यादानफलं लभेत् ।
कोटिलिङ्गप्रतिष्ठायां यत्फलं शास्त्रवर्णितम् ॥९॥
तत्फलं लभते मर्त्यः सकृच्चूतेशसेवया ।
हररोमसमुद्भूत सर्वतीर्थसमन्वयात् ॥१०॥
कम्पया पूरितं वन्दे भाद्रं तत्सर्वतीर्थकम् ।
भाद्रया सर्वतीर्थेषु स्नानतो यत्फलं नृणाम् ॥११॥
सर्वतीर्थे सकृत् स्नानात् तत्फलं लभते नरः ।
य इत्थं प्रातरुत्थाय स्नानकाले पठेन्नरः ॥१२॥
श्लोकद्वादशमात्रेण श्लोकोक्तफलमाप्नुयात् ।
एतद्रहस्यमाख्यातं सर्वतीर्थप्रकाशकम् ॥१३॥
यः पठेच्छृणुयान्नित्यमिममध्यायमादरात् ।
सर्वतीर्थसरस्स्नानात् यत्फलं तत्फलं लभेत् ॥१४॥

மகாபுண்ணியகரமாயும், சகலபாவங்களையும், போக்கடிக்கிறதாயும் சகல தீர்த்தங்களும் தன்னிடத்தில் அடங்கியிருக்கப் பெற்றதாயுமுள்ள சர்வதீர்த்தமானது பூர்வத்தில் சிவபெருமான் தேவியை நீங்கியிருந்தகாலத்தில் தமக்குண்டாயிருந்த காமாக்னியானது பின்னர் அத்தேவி தழுவத்தணிந்து, வளைச்சுவடோடு முலைச்சுவடும் பிரகாசித்தவராய்ப் பிரீதியடைந்து, முன் தமது ஜடைமுடியினின்றும் பெருகச்செய்த வெள்ளத்தைக் கண்டு உமாதேவியார் பயமுற்றபடியினால் அந்த வெள்ளத்தையடக்கி அவரது பயத்தைப் போக்குதற்குத் தமது பாதத்தைப் பூமியிலூன்றியதால் உண்டாகியது எதுவோ அதுவே இத்தடாகமாகும்.

அதில் ஆயிரமுகமாகப் பெருக்கெடுத்துவந்த வெள்ளமானது நந்திமலை பாலாறு திருப்பாற்கடல் என்கிற இம்மூன்று ஸம்பந்தங்களையுடையதாயும், வாரகபுரம், பக்ஷபுரம், அம்பிகாபுரம் என்கிற இம்மூன்று புரங்களுடைய மார்க்கத்தையுடையதாயும், சூத (மா) மூலம், சிவமூலம் என்கிற க்ஷேத்திரபிரஸ்த சம்பந்தங்களையுடையதாயும் செல்லுகின்றபோது சமுத்திர காமினியாகச் சென்று க்ஷீரநதியோடு கூடிக்கலந்து நல்ல பெரு வெள்ளமாய்ப் பெருகி யாவர்கண்ணுக்கும், தோன்றுகிருக்கும் வண்ணம் பூமியில் அந்தர்வாகினி (கீழ்வழி) யாய் வந்து பாத்திரத்துள்ளிருந்து விழும் ஜலம் போல் அதில் விழப்பெற்றதாயு முள்ளது அச்சர்வ தீர்த்தம்.

காமாக்ஷி தேவியைத் திருமணம் புணர்ந்த பின்னர் முன் தமது ரோம கூபத்தினின்றும் பெருகிய மூன்றரைக்கோடி தீர்த்த சமூகமாகிய வெள்ளமானது 'பிரளயபந்தனி' என்னும் துர்க்கையினுடைய கபாலத்தில் அடங்கியிருந்தபடியினால் அந்தக் கபால வெள்ளத்தையும் அதில் வீழ்ந்திருக்கச் செய்தனர்.

இவ்வண்ணம் சிவபெருமானார் சர்வதீர்த்தம் உண்டாக்கிய பின்னர் காமாக்ஷி தேவியைப்பார்த்து அத்தீர்த்தத்தைக் காட்டி "ஹே, தேவி! நீ என்னைப் பூஜித்துவந்த காலத்தில் உன்னைப் பயமுறுத்தி உன்னால் கம்பை என்று பெயர்பெற்ற நதியானது இத்தடாகத்தில் வந்து கலந்திருக்கிறது § பிரளயபந்தனியினுடைய கபாலம் வற்றிப் போயிற்றென்று சொல்லியபோது அதனைத் தேவியார் கேட்டுப் புன்னகையரும்பி அத்தீர்த்தத்தின் மகிமை இத்தன்மைத்தெ என அறிந்து அதில் ஸ்நானஞ்செய்ய விருப்பமுடையவராய் அத்தீர்த்தத்தைப்படி முறைகளாலும், மண்

---

§ உமாதேவியார் சிவபெருமானார் தம்மைத் தழுவுவதற்கு முன் கங்கை பெருகி மூன்றரைக்கோடி தீர்த்தங்களோடும் கலந்துவந்து பிரளயபந்தனியினுடைய கபாலத்திலடங்கி அதினின்றும் ஆயிரமுகமாய்ப் பெருகிய பெருவெள்ளமும், திருமணம் புணர்ந்த பின்னர் பிரளயபந்தனியினுடைய கபாலத்திலடங்கியிருந்த வெள்ளமும் சர்வதீர்த்தத்தில் கலந்திருக்கிறதெனக் கொள்க. இரண்டுமுறையாய் வந்த வெள்ளத்திற்கும் கம்பை என்றே பெயர். இந்தக் கம்பையின் வரலாற்றை முன் சொன்ன எட்டாவது அத்தியாயத்திலும் இந்த ஒன்பதாவது அத்தியாயத்திலும் காண்க.

டப வரிசைகளாலும் அழகுபெறச் செய்து சங்கற்பம் கூறி ஸ்நானம் செய்து புத்தீர்த்தத்தினின்றும் எழுந்திருக்கும்பொழுது யௌவனமுடையவராயும், ஸௌந்தரியமுடையவராயும் பிரகாசிக்கின்ற மங்களஸ்வரூபமுடையவராயும் விளங்கினர்.

பின்னர்த் தமது உருவத்தைக்கண்டு மகிழ்ந்து அத்தீர்த்தக் கரையில் நின்று ருக், யஜுர், சாமவேதியர்களான அந்தணர்களுக்குக் கோதான ஹிரணியதானங்களும், சூரிய சந்திரரிருக்கும் வரையில் சாச்வதமான ஜீவனம் செய்யப் பூதான கிருகதானங்களும் செய்து, அவ்விடத்தினின்றும் புறப்பட்டுக் காமகோட்டத்தையடைந்து தருமசாலைகளை ஏற்படுத்தி மகா திரிபுரசுந்தரியாயும், ஆதிசக்தியாயும் இருக்கின்ற தேவியை ஆராதித்து மீண்டும் தருமசாலைக்குத் திரும்பிச் சிரேஷ்டமான முப்பத்திரண்டு தருமங்களையும் செய்து அத்தருமம் எக்காலமும் நடந்துவரவேண்டுமென்னும் எண்ணமுடையவராய் அக்ஷயபாத்திரம் காமதேனு கற்பக விருக்ஷம் சிந்தாமணி என்னும் இவைகளைப் பிரதிஷ்டை செய்து, அவைகளைக்கொண்டு அம்முப்பத்திரண்டு தருமங்களையும் யுகங்கள்தோறும் அழிவின்றிச் சரிவர நடத்த அரசனுணையின்றியமையாதாகலான் என்றும் அழிவில்லாதவராகிய கணபதியை அரசராக நியமித்து முடிசூட்டி அவரிடம் ஒப்புவித்து, பின்னர் காமகோடி பீடத்தில் வசிக்கும் திரிபுரசுந்தரியைப் பிரதக்ஷிணமாக வந்து வணங்கிப் போற்றி விடைபெற்றுக் காஞ்சி நகரத்துக் கதிபதியாயிராநின்ற கச்சபேச்வரமூர்த்தியிடம் சென்று அவரையும் விதிவத்தாய்ப்பூஜித்துப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து விடைபெற்றுச் சர்வதீர்த்தத்துக்குப்போய் அந்தத் தீர்த்தத்தை மூன்று பிரதக்ஷணம் செய்து அத்தீர்த்தக்கரையினின்று தீர்த்த ஸ்நானத்தையுத்தேசித்து யாத்திரையாகச் சென்று 'சகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தவர்களுக்கு என்ன பலனுண்டாகுமோ அந்தப்பலன் இந்தத்தீர்த்தத்தைத் தரிசித்த மாத்திரத்தில் உண்டாகும்' என்றும், 'விதித்திருக்கும் பலபுண்ணிய காலங்களில் பல புண்ணியதீர்த்தங்கடோறும் ஸ்நானம் செய்தால் யாதொரு பலன்களுண்டாகுமோ அந்தப்பலன்களை இதில் ஸ்நானம் செய்பவர் அடையப்பெறுவார்கள்' என்றும் வரம் கொடுத்துத் தமது நாயகரிடம் சென்று வணங்கி அவரது வாமபாகத்தையடைந்து நித்யகல்யாணியாய் விளங்கினர். அதுமுதற்கொண்டு